மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 87/2024

பெயர் : பானுமதி
சாட்சி – வா.சா–1 நாள்: 19.02.2026

---

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பு)**

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நாங்கள் வாங்கிய பத்திரத்தில் எழுத்துப்பிழை இருந்தது அதனை எழுதிக்கொடுத்தவர்களிடம் திருத்தம் செய்துகொடுக்க கோரிய போது அவர்கள் வரவில்லை. மேற்படி பிழையை சரிசெய்வதற்காக தாக்கல் செய்துள்ளோம். சொத்தினை எப்போது கிரையம் பெற்றேன் என்றால் 2009ம் ஆண்டு விஜயகுமார் என்பவரின் பொது அதிகார முகவராக ராமசாமி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன். தேதி நினைவில் இல்லை.

2.. நான் M.Sc.,B.Ed., படித்துள்ளேன். ஒரு ஆவணத்தை வாங்கும் போது அதன் மூல ஆவணங்களை சரிபார்த்து தான் வாங்க வேண்டும் என்றால் சரிதான். நான் சொத்தினை ஆவணங்களை சரிபார்த்து தான் வாங்கினேனா என்றால் எனது உறவினர் அறிமுகப்படுத்தியதால் சட்ட கருத்துரை வாங்கி தான் வாங்கினேன். ஆனால் பத்திரத்தில் எழுத்துப்பிழை ஏற்பட்டுள்ளதை கவனிக்கவில்லை. 2009ம் ஆண்டு கிரையம் பெற்ற போதே நான் அதை கவனித்திருக்க வாய்ப்பிருந்தும் செய்யமால் சுமார் 15 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

3. 1ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோர வில்லை என்றால் சரிதான். நானும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மட்டுமே தீர்வு காண வேண்டிய பிரச்சனைக்கு தேவையில்லாமல் 1ம் பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்த்துள்ளது ஏற்புடையது அல்ல இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.19 18:18:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.